# பத்திரிக்கை செய்தி

**<u>நில மதிப்பீட்டை குறைக்க லஞ்சம் பெற்ற வழக்கில் அப்போதைய மாவட்ட வருவாய் அலுவலருக்கு 5 ஆண்டுகள் கடுங்காவல் சிறை மற்றும் தனி நபருக்கு 4 ஆண்டுகள் கடுங்காவல் சிறை</u>**

புகார்தாரர் திரு.சந்திரபாபு, காஞ்சிபுரம் மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் காஞ்சிபுரம் மாவட்டத்தில் நிலம் வாங்கியுள்ளார். தன்னுடைய நிலத்திற்கு நில மதிப்பீடானது அதிகப்படியாக இருந்த காரணத்தினால் நில மதிப்பீட்டை குறைத்து தருமாறு விண்ணப்பித்துள்ளார். திரு.மோகனசுந்தரம், மாவட்ட வருவாய் அலுவலர், சென்னை மாவட்டம் ரூ.60,000/- லஞ்சமாக கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை பிரிவில் புகார் அளித்தார். இப்புகாரின் அடிப்படையில் பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, திரு.மோகனசுந்தரம், மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் அறிவுரையின் பேரில் செல்வி.ரேவதி, தனிநபர் அவர்கள் புகார்தாரரிடமிருந்து லஞ்ச பணம் ரூ.60,000/- பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையால் கைது செய்யப்பட்டார். இவ்வழக்கானது சிறப்பு நீதிமன்றம், சென்னையில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கில் இன்று 14.03.2025 திரு.மோகனசுந்தரம், மாவட்ட வருவாய் அலுவலருக்கு 5 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும் மொத்தம் ரூ.1,00,000/- அபராதமும் மேலும் செல்வி.ரேவதி, தனிநபருக்கு 4 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும் மொத்தம் ரூ.50,000/- அபராதமும் விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.